# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 72 — 1973 අගෝස්තු 10 වැනි සිකුරාදා — 1973.08.10**

72 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 817 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 822 | ஏலவிற்பனைகள் | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் | — | நானாவித அறிவித்தல்கள் | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

*தபாற் தந்திப் பகுதி*

பொருட்களை ஏற்றியிறக்கல்

கீழ் கொடுக்கப்பட்டுள்ள இடங்களில் இருந்து பொருட்களை ஏற்றியிறக்கலுக்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 1, தபாற் தந்திப் போக்குவரத்து தலைமைக் கந்தோர்க் கட்டிடத்திலுள்ள பெரும்பாக கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் 1973 ஓகஸ்ட் 25 ம் திகதி மு. ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) அரசாங்கக் களஞ்சியத் திணைக்களத்திலிருந்து மருதானை தபாற் தந்திக் களஞ்சியத்திற்கு.

(ii) புகையிரத, சுங்கப் பகுதி, தபாற் தந்திக் களஞ்சியங்களில் இருந்தும் மீண்டும் அவ்விடங்களுக்கும்.

(iii) கொழும்புக்குள்ளும், கொழும்பைச் சுற்றி 15 மைல்கள் உள்ளடக்கியும்.

(iv) திணைக்கள அலுவல்கள் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு மாறுதலாகிச் செல்லும் பொழுது பொருட்களை ஏற்றியிறக்குவதற்கு.

2. கேள்விப் பத்திரங்கள் 1973 ஓகத்து 25 ம் திகதி மு. ப. 10.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப் படும் பொழுது விண்ணப்பதாரர்கள் சமுகமளிக்க அனுமதிக்கப் படுவர்.

3. கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 5, நாராஹேன்பிட்டி, கிருல வீதியிலுள்ள தபாற் தந்திப் போக்குவரத்துத் திணைக்களத்தின் உபகரண, கட்டட, நலன்புரி, களஞ்சியக்கிளை உதவி அத்தியட்சகரினது அலுவலகத்தில் பெற்ற பத்திரங்களில் அனுப்பப்படல் வேண்டும். கூறுவிலை, பொருள்கள் ஒரு தொன் ஒரு மைலுக்கு என்ற அடிப்படையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. கொழும்பு 1, பி. த. க. விசாரணைகள் செய்யும் கரும பீடத்தில் கேள்விப் பத்திர பொறுப்புப் பணமாக ரூபா 50 கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டை சமர்ப்பிக்கும் கேள்விப் பத்திர விண்ணப்பதாரர்களுக்கே கேள்விப் பத்திர சாதனங்கள் 1973.08.10 ம் திகதி தொடக்கம் 1973.08.24 ம் திகதி பி. ப. 3.30 மணி வரை வழங்கப் படும்.

வீ. தயா கருணாரத்ன,
உதவி அஞ்சல் அதிபர் நாயகம்.
(அஞ்சல் சேவை)

த. த. த. அலுவலகம்,
கொழும்பு 1.

8-495—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

### முக்கிய அறிவித்தல்

***இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.***

*எல். டபிள்யூ. பி. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

### அஞ்சல் தந்தித் திணைக்களம்

#### இறப்பர் முத்திரை அச்சுகள் வழங்குதல்

கொழும்பு 1, அஞ்சல் தந்தித் திணைக்களத்தின் தலைமை அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாவட்ட கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் இறப்பர் முத்திரை அச்சுக்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் 1973 ஓகஸ்ட் 25 ம் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. 25.08.1973 ந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்விப் பத்திரதாரர் விரும்பினால் சமூகம் அளிக்கலாம்.

3. கொழும்பு 5, நாராஹேன்பிட்டியிலுள்ள உபகரண, கட்டட, நலன்புரி, களஞ்சிய உதவி அத்தியட்சகரின் அலுவலகத்தில் பெற்றுக் கொண்ட படிவங்களிலே கேள்விப் பத்திரங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

4. கொழும்பு, பி. அ. அலுவலகத்திலுள்ள வந்து பெறும் அஞ்சல் வைப்புக் கரும பீடத்தில் (இல. 4) வைப்புப் பணமாக ரூபா 50 கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டைச் சமர்ப்பிக்கும் கேள்விப் பத்திரதாரருக்கே கேள்விப் பத்திரப் படிவங்கள் 10.08.1973 ல் இருந்து 24.08.1973 பி. ப. 3.30 மணிவரை வழங்கப்படும்.

5. கொழும்பு 5, நாராஹேன்பிட்டியிலுள்ள உபகரண, கட்டட, நலன்புரி, களஞ்சிய உதவி அத்தியட்சகரின் அலுவலகத்தில் மேலதிக விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

வீ. தயாகருணாரத்ன,
உதவி அஞ்சல் அதிபர் நாயகம்.
(அஞ்சல் சேவைகள்)

அஞ்சல் பிரிவு,
அ. த. தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

8-494—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72.

---

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவர் 1973.08.30 ந் திகதி காலை 10 மணி வரை குருநாகலிலுள்ள பசையூட்டும் பொறித் தொகுதிக் கட்டிடத்திற்கு அட்டைப் பலகையும், காய்ச்சியொட்டிய கம்பி வலையும் இணைப்பதற்கான கேள்விகளை ஏற்றுக்கொள்வார்.

2. ரூபா 5,000 மோ அதற்கு மேற்பட்டவோ செலவாகும் கட்டிட வேலைகட்கென ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களத்திற் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கட்கும் கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

விரும்பும் கேள்வியாளர்கள், கேள்விப் படிவங்களைப் பெறுவதற்கு 1973.08.29 நண்பகல் பன்னிரண்டு மணிக்கோ அதன் முன்போ இத்திணைக்கள அலுவலகத்திற் கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 25 ஐச் செலுத்திப் பற்றுச் சீட்டையும் பதிவுச் சான்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1-(1/57)
சிறுகைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.07.28.

8-460—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

---

### காணி அபிவிருத்தித் திணைக்களம்

#### மெருகிடு வர்ணம் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்

கீழ்வரும் வர்ணங்களை வழங்குதற்கான கேள்விப்பத்திரங்களை 73.08.24 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார்.

தனிக்குறிப்பீடு

வெளி, உள் பாவனைக்குகந்ததும், விரைவில் உலரக்கூடியதும், மாஅமைப்புகளான கதவுகள், சாளரங்கள் (யன்னல்), பலகைகள் முதலியவற்றிற்குப் பூசக்கூடியதுமான வர்ணங்கள்.

பிளேக் சிலேற் கிறே—பிரிட்டிஷ் ஸ்ரான்டேட் 9—094
சாம்பல் கிறே—பிரிட்டிஷ் ஸ்ரான்டேட் 9—096

அளவுகள்

பிளேக் சிலேற் கிறே—200 கலன்கள்
சாம்பல் கிறே—200 கலன்கள்

2. கேள்விக்காரர்கள் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம் :—

(அ) முன்னைய இருப்பும்
(ஆ) கிருலப்பனை மத்திய வேலைத்தளத்தில் விநியோகிக்கப்பட்டவை. கேள்விக்காரர்கள் முந்திய விநியோக காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப் பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50.00 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ஆம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி, 73.08.23 ஆந் திகதி நண்பகல் 12 மணி வரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப்பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையு முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "வர்ணம் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்க கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப் பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப் பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்ற முடியாதவையுமாகும். கேள்விப் பத்திரங்களை ஒப்பு நோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

7. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 73.08.24 ந் திகதி முற்பகல் 11.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களம், கொழும்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

சீரி/2/449
காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1973.07.31.

8-492—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72.

## வேலைப் பணிப்பாளர் அலுவலகம்

### மின்னேரியா பிரிவு

மின்னேரியாப் பிரிவின் பேய்க்குளம் புதுப்பிக்கும் வேலைகளுக்கு புறம்பான பொறியிட்ட கேள்விப் பத்திரங்கள் பொலனறுவை வட கீழ்ப் பிரதேச வேலைப்பணிப்பாளர் அவர்களால் 1973 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 4 ந் தேதி காலை 10 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஏதாவது ஒரு அரசாங்கத் திணைக்களமுத்தில் கீழ் கூறப்படும் தொகைக்கோ அல்லது அதற்கு மேலோ பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரர்கள் கூட்டுறவுச் சங்கங்கள். கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

| கேள்விப்பத்திர இலக்கம் | வேலை விபரம் | பதிவுத் தொகை ரூபா | கேள்விப் பத்திர கட்டணங்கள் ரூபா |
|---|---|---|---|
| பி/1/73 | .. பிரி 1. பிரதான அணைக்கட்டு மண்வேலை | .. 70,000 அல்லது மேல் | .. 100 |
| பி/2/73 | .. பிரி. 2. அணைக்கட்டு முடிக்கும் மண்வேலை | .. 2,55,000 அல்லது மேல் | .. 250 |
| பி/3/73 | .. பிரி. 3. கலிங்கு அமைக்கும் வேலை | .. 1,55,000 அல்லது மேல் | .. 200 |
| பி/4/73 | .. பிரி. 4. அடையந்தெரு அமைப்பு வேலை | .. 75,000 அல்லது மேல் | .. 100 |

இக்கேள்விப் பத்திரங்கள் மின்னேரியாப் பிரிவு வேலைப்பணிப்பாளர் அலுவலகத்தில் 1973 ம் ஆண்டு ஆவணி மாதம் 31 ந் தேதி மாலை 3.30 மணி வரையும் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் இரு பிரதிகளில் விண்ணப்பிக்க வேண்டும்.

3. கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது அலுவலகத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் தெரியப்படுத்தி கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் கேள்விப்கட்டணமாக மேற்கூறிய தொகையை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் மின்னேரியாப் பிரிவு நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அக்கட்டணத்தை ஒரு கச்சேரியில் செலுத்தி பற்றுச்சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

3அ. பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்போர் இரு பிரதிகளில் தங்கள் கையெழுத்தையும் திகதியையும் இட்டு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பொலனறுவை வட கீழ் பிரதேச வேலைப்பணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள இதற்காய கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் போடலாம். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் " பேய்க்குளம் புதுப்பித்தலுக்கான கேள்விப்பத்திரம் " எனக் குறிப்பிடவேண்டும்.

4. மேலதிக விபரங்களை மின்னேரியாப் பிரிவு நிறைவேற்றுக் பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

5. இக்கேள்விப்பத்திரங்கள், கேள்விப்பத்திரங்கள் திறக்கப்பட்ட திகதியில் இருந்து 5 மாதங்கள் வரை செல்லுபடியாகும்.

ஏ. தயத்துரை.
நிறைவேற்றுப் பொறியியலாளர்,
மின்னேரியாப்பகுதி.

நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம்,
மின்னேரியாப் பகுதி,
ஹிங்குருக்கொட,
1973 ம் ஆண்டு ஆடி மீ 27 ந் டை.

8–493—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

---

## காணிப்பகுதி ஆணையாளர்

மாத்தறை மாவட்டத்துக்குள் ஹொறேதொள-விடியாளகொட-கிதுள்அல்லவத்த வீதியில் முதலாம் கட்டை சம்பந்தமாக ரூபா 50,000/- க்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு பகிரங்க வேலைப்பகுதி அல்லது நீர்ப்பாசனப்பகுதி அல்லது கல்விப்பகுதி வேலைகள் நிமித்தம் (அ) அரசாங்க கொந்துறுத்காரர் (ஆ) கூலியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் கேள்விப்பத்திரங்கள் மேற்படி வேலைகள் சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

2. இரண்டு பிரதிகள் ஒரே உறையில் ஸீல் வைக்கப்பட்டு தெளிவாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 'தலைவர் காணியாளர் இலாகா, கேள்விப்பத்திரச்சபை, த. பெ. இலக்கம் 500, கொழும்பு' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் கொழும்பிலுள்ள காலி மைதானத்திலுள்ள செயலாளர் அலுவலகத்திலுள்ள 320 இலக்க அறையில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடப்படவேண்டும். அல்லது பதிவு தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் அடங்கிய தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் "ஹொறேதொள-விடியாளகொட- " கிதுள்அல்லவத்த வீதியில் முதலாம் கட்டை சம்பந்தமான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிடல் வேண்டும். 1973.09.07 ந் திகதி பி. ப. 2.30 மணிக்குமுன் கேள்விப்பத்திரச் சபைத் தலைவருக்குக் கிடைக்கும்படி, அனுப்பப்படல் வேண்டும். அதே நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாய் இருக்கலாம்.

5. 1973.09.04 ந் திகதி பகல் 12 மணி வரை மாத்தறைக் கச்சேரியிலிருந்து கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். நியமிக்கப்பட்ட பத்திரங்களில் விண்ணப்பிக்காவிட்டால் ஆலோசனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. கேள்விக்காரர்கள் பிழை திருத்தங்கள் செய்திருந்தால் அழித்திருந்தால் ஒவ்வொரு திருத்தங்களும் கேள்விப்பத்திரகாரரால் ஒப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

7. கேள்விப்பத்திரங்கள் விநியோகிப்பதற்கு முன் ரூபா 50/- வைப்புப் பணமாக மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபர்பேரில் கட்டப்பட்ட பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கும்போது தேவையான கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். முதல் பந்தியில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் இவ்வைப்புப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்குரியவர்கள் இதுபற்றியவர்களுக்கு அறிவித்தல் கடிதத்திலுள்ள தினத்திலிருந்து 10 நாட்களுக்குள், இதற்குரிய பிணைத்தொகையைக் கட்டி ஒப்பந்தத்தைச் செய்ய மறுத்தால், அன்னாரின் கேள்விப்பத்திர வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

9. கேள்விப்பத்திரங்களை ஒப்புக்கொண்டபடிக்கு கேள்விக்காரர்களால் கொடுக்கப்பட்ட விலாசத்துக்கு அனுப்பினால், கேள்விக்காரர்களுக்கு கிடைத்திருக்குமென்று நம்பப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதின் பிறகு மற்றும் வைப்புப் பணங்களைத் திருப்பிக் கொடுக்கப்படும்.

10. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வியாளர்கள் முழுத்தொகையில் 5% சத வீதத்தை, பிணைத்தொகையாகக் கட்டி வேலை திருப்திகரமாக குறிப்பிட்ட காலத்தில் முடித்துக் கொடுப்பதற்கென, மாத்தறை அரசாங்க அதிபருடன் ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும். முதல் பந்தியில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் இவ்வைப்புப் பணம் கட்ட வேண்டிய அவசியமில்லை.

11. ஏதேனும் ஒரு கேள்வியை (டென்டர்) அல்லது அதன் பகுதியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ, அரசாங்கத்துக்கு பூரண அதிகாரமுண்டு.

12. அரசாங்க வேலை திருப்திகரமாகச் செய்யப்படாத ஒப்பந்தக்காரரின் பட்டியலில், கொந்துருத் கேள்வியாளரின் பெயர் இருந்தால், அன்னாரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

பி. டப்லிவ். ஸீ. த சில்வா,
அரசாங்க அதிபருக்காக,
மாத்தறை மாவட்டம்.

மாத்தறைக் கச்சேரி.
1973.07.26.

8-491—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72.

---

**200 பட்டுப் புழு வளர்ப்புத் தட்டங்களை வழங்குவதற்கான கூறுவிலை**

பின்னால் தரப்பட்ட குறிப்புகளில் தரப்பட்டவாறு பட்டுப் புழு வளர்ப்பதற்கான தட்டங்களை வழங்குவதற்கான கூறு விலைப் பத்திரங்கள் சிறு ஏற்றுமதிப்பயிர்கள் திணைக்களப் பணிப்பாளரால் 159, தர்மபாலா மாவத்தை, கொழும்பு-7 இல் உள்ள அலுவலகத்தில் 1973 ஆம் ஆண்டு ஓகஸ்த்து மாதம் 25 ஆம் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. **பட்டுப் புழு வளர்ப்புத் தட்டத்துக்கான விவரக் கூற்று**

இத்தட்டம் 4 அடி நீளம் 3 அடி அகலமும் நான்கு பக்கங்களிலும் 2½ அங்குல உயரமானதும் அரை அங்குலத் தடிப்பமுள்ளதுமான சட்டத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். தட்டத்தின் அடிப் பாகத்தில் ஒரு அங்குல அகலமும் அரை அங்குல தடிப்பமும் கொண்ட மரச்சிலாகைகள் அரை அங்குல இடை வெளிக்கு ஒன்றாகப் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இச் சிலாகைகள் 3 அடிப் பக்கத்திற்கு அதாவது அகலப் பக்கத்திற்கு சமாந்திரமாகப் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். தட்டின் அடிப்பாகத்தில் மேலே சொல்லப்பட்ட சிலாகைகளுக்கு கீழ் அரை அங்குல நீளம் அரை அங்குல அகலம் கொண்ட கீழ் விளிம்புகள் உருண்டை வடிவிலானதும் நாலு அடிப்பக்கத்திற்குச் சமாந்திரமாயும் ஓடும் சிலாகைகளையுடையதும் இவற்றுள் இரண்டு சிலாகைகள் நான்கு அடிக்கரையின் பக்க விளிம்புகளுக்குக் கீழாக ஓடுவனவாயும் ஆனால் 3 அடிக்குச் சமாந்திரமாக ஓடும் சிலாகைகளுக்கு கீழாக ஓடுவனவாயுமிருத்தல் வேண்டும். ஏனைய இரண்டு சிலாகைகளும் எஞ்சியிருக்கும் இடத்தை சம அளவான மூன்று கூறுகளாகப் பிரிக்கும் விதத்தில் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு மூலையும் 3 அங்குல நீள முக்கோண வடிவுள்ள துண்டுகளால் மூன்று அடி நான்கு அடிப் பக்கங்களில் பதித்து வலுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

பாவிக்கப்படும் மரம் யாவும் முற்றிய சப்பு மரத்தால் அழுத்தமாகச் செய்யப்பட்டிருக்க வேண்டும். பொருத்துகள் யாவும் நெருக்கமாகவும் இறுக்கமாகவும் பொருத்தப்பட்டிருப்பதுடன் ஆணிகள் யாவும் நன்றாகச் செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

பொதுவில் வேலை முடிந்த தட்டு பல்லேகெல்லை, கெங்கல்லையிலுள்ள பட்டுப் பூச்சி வளர்ப்புச் செய் திட்ட முகாமையாளரின் அலுவலகத்திலுள்ள சீல் பொறிக்கப்பட்ட மாதிரித் தட்டத்தைப் போன்றும் அத்துடன் அடிப்பாகத்திலுள்ள மரச் சிலாகைகள் இவ்விபரக் கூற்றில் இருப்பதைப் போன்றிருக்க வேண்டும்.

3. கூறு விலைகள் இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு முத்திரை இடப்பட்ட உறையுள் வைத்து "பட்டுப் புழு வளர்ப்புத் தட்டங்கள் வழங்குவதற்கான கூறு விலை" என இடது பக்க மூலையில் எழுதப்பட்டு கூறு விலை முடிவுத் திகதிக்கென குறிப்பிட்ட நேரத்தின் முன் 159, தர்மபால மாவத்தை, கொழும்பு 7 இல் உள்ள சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களத்துப் பணிப்பாளருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

4. குறிப்பிட்ட விலை வீதம் பல்லேகல்லையிலுள்ள மத்திய பட்டுப்பூச்சி நிலையத்தில் வழங்கப்படும் ஒவ்வொரு தட்டங்களுக்குமான விதத்தில் இருக்க வேண்டியது. வீதம் யாவும் எண்களிலும் சொற்களிலும் குறிப்பிடப்பட வேண்டியது.

5. விலைக்குறிப்பீடுகள், கூறுவிலை முடிவு திகதியிலிருந்து முப்பது நாட்கள் வரையான காலத்துக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய செல்லுபடி நிலையில் வைத்திருக்கப்பட வேண்டும்.

6. கூறுவிலை ஏற்றுக்கொண்டமையை தெரிந்தெடுக்கப்படும் கேள்வியாளருக்கு அறிவிக்கப்பட்டு மூன்று வாரங்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட தட்டங்களை அவர் வழங்குவார் என்பதை தெளிவாக உறுதிப்படுத்த வேண்டும். கூறுவிலையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டதையிட்டு அவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.

7. கூறுவிலை ஒன்றை அல்லது எல்லாவற்றையும் நிராகரித்தலையும் கூறுவிலை விவரக் கூற்றினை அல்லது அதன் ஓர் பாகத்தையும் எதுவித காரணமுமின்றி தீர்மானிப்பதையும் அரசாங்கம் தனக்குத் தானே வைத்துக்கொண்டுள்ளது.

ச. ஜயனெத்தி,
பணிப்பாளர்,
சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம்.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம்,
159, தர்மபாலா மாவத்தை,
கொழும்பு 7,
1973-7-26.

8-482—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72.

---

**புத்தளம் மாவட்டத்தில் கட்டிட வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள்**

புத்தள மாவட்டத்தில் கீழ்க் குறிக்கப்படும் கட்டிட வேலைக்கான கேள்விப் பத்திரங்கள், புத்தளம் கச்சேரி, கேள்விப்பத்திர சபைத் தலைவரால் 31.8.1973 ம் திகதி பி. ப. 2.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் விபரம் | காரியாதிகாரி பிரிவு | பதிவுசெய்திருக்க வேண்டிய தொகை ரூபா |
|---|---|---|
| அபிவிருத்தி வேலை அதிகாரிக்கு (எஸ்டி டபிள்யு) காரியாலயம் அமைத்தல் | புத்தளம் | 2,500 |

2. அரசாங்க அலுவலகங்களில் மேலே கூறப்பட்டிருக்கும் தொகை ரூபாவுக்கும் அல்லது அதற்கு மேலும் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தொழிற் சங்கங்களுக்கும், கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கான வெற்றுப் பத்திரங்கள் 73.8.28 ந் திகதி பி. ப. 2.30 மணிவரை புத்தளம் கச்சேரியில் விநியோகிக்கப்படும்.

3. கொந்தராத்துக்காரர்கள், மேற்கூறிய வேலைகளுக்குக் கேள்விப்பத்திர வைப்புப்பணமாக ரூபா 25 வீதம், புத்தளம் கச்சேரியிலோ, வேறெந்த கச்சேரியிலோ அல்லது பொதுத் திறைசேரியிலோ பணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், மேலே கூறப்பட்ட ரூபா அல்லது அதற்கு மேலான தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர் என அத்தாட்சிப்படுத்தும் பத்திரங்களை, கேள்விப் பத்திரங்களுக்கான வெற்றுப்பத்திரங்கள் கொடுபடுமுன், புத்தள அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர வைப்புப்பணம் கட்டத் தேவையில்லை. எப்படியென்றாலும் மேலே கூறப்பட்ட ரூபாவுக்குப் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களைச் சமர்ப்பித்த பின்னரே கேள்விப்பத்திரங்கள் இவர்களுக்கு வழங்கப்படும். காசோலைகள், தபாற்கட்டளைகள், காசுக்கட்டளைகள் ஆகியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4. புத்தளம் அரசாங்க அதிபரிடம் இருந்து பெறும் பத்திரங்கள் இணைப்பிரதியில் நிரப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களில் கையொப்பமிட்டு, திகதியிட்டு, முத்திரையிடப்பட்ட கவரில் போட்டு, அக்கவரின் இடது பக்க மேல் மூலையில் "........... கட்டு வேலைக்கான கேள்விப் பத்திரங்கள்" எனக் குறிப்பிடவேண்டும். கேள்விப் பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால், கேள்விப் பத்திரங்களைத் தாமாகவே புத்தளக் கச்சேரியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இட வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் 73.09.03 ந் திகதி காலை 10.30 மணிக்கு புத்தளக் கச்சேரியில் வைத்துத் திறக்கப்படும். அப்பொழுது கேள்விக்காரர்களோ அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளோ சமுகமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

6. காரணம் காட்டாமல் கேள்விப்பத்திரங்களில், ஏதாவதொன்றையோ அதன் பகுதியொன்றையோ ஏற்றுக்கொள்ளவும், கேள்விப்பத்திரங்களில் ஏதாவதொன்று அல்லது முழுவதையும் நிராகரிக்க கேள்விப்பத்திரச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர், தமது கேள்விப்பத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டவுடன், கேள்விக்குரிய தொகை ரூபாவின் நூற்றுக்கு ஐந்து வீதத் தொகையை பாதுகாப்புப் பணமாகக் கட்ட வேண்டும். அத்துடன் ஏழு நாட்களுள் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரருக்கு அவர் கொடுத்த விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ, தெரிந்தெடுக்கப்பட்டதை கடித மூலம் அறிவித்தால், கேள்விப்பத்திரகாரர் ஏற்றுக்கொண்டார் என்று கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டது பற்றி கடிதம் பெற்ற ஒருவர், ஒப்பந்தம் எழுதத் தவறுவாராயின் அவர் கட்டிய கேள்விப்பத்திர வைப்புப் பணம் அரசாங்கத்துக்குச் சொந்தமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக்காரர், கேள்விப்பத்திரத் தொகையின் நூற்றில் ஐந்து பங்கைக் கட்டியவுடன், தேர்ந்தெடுக்கப்படாதோரின் கேள்விப்பத்திர வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

8. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர், நியமித்த வேலையை முடிப்பதற்கு இலங்கையரையே வேலைக்கமர்த்தல் வேண்டும். அதுவும் வேலை ஏற்றுக்கொள்ளப்பட்ட பகுதியில் சீவிப்பவரையே தேர்ந்தெடுத்தல் வேண்டும். கூலியாட்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கென இப்பொழுது பாவிப்பில் உள்ள சட்டங்கள், பின்னும் பாவிப்பிற்கு வரவிருக்கும் சட்டங்களுக்கு இணங்கவே, இவ்வேலையை முடிப்பதற்குத் நாமான வேதனம் வழங்க வேண்டும்.

9. வேறு விபரங்கள் புத்தள அரசாங்க அதிபரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பா. கு. விஜயவீர,
அரசாங்க அதிபர்,
புத்தள மாவட்டம்.

புத்தளக் கச்சேரி,
1973 ஆடி 30.

2-486—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

---

கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

வெள்ளை எம். எவ். பத்திரிகைத்தாள் மற்றும் பிளீச்ற்ட் மெக்கானிக்கல் அச்சடிக்கும் கடதாசி ஆகியவற்றை வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்

பின்வரும் கடதாசி வகைகளை வழங்குவதற்கு விலைக் குறிப்பீடுகள் கோரப்படுகின்றன :—

1. 5000 மெற்றிக் தொன் வெள்ளை எம். எவ். பத்திரிகைத் தாள் —றீல்களில்
2. 2500 மெற்றிக் தொன் வெள்ளை எம். எவ். பத்திரிகைத்தாள் —தாள்களில்.
3. 500 மெற்றிக் தொன் பிளீச்ற்ட் மெக்கானிக்கல் அச்சடிக்கும் கடதாசி—றீல்களில்.
4. 500 மெற்றிக் தொன் பிளீச்ற்ட் மெக்கானிக்கல் அச்சடிக்கும் கடதாசி—தாள்களில்.

விலைக் குறிப்பீடுகள் 1973 செப்தெம்பர் 13 ந் திகதி பி. ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

பொறுப்பு முதல்வர்களின் பெயர்கள் மற்றும் விலாசங்களைக் குறிப்பிட்டு எழுத்து மூலம் விண்ணப்பம் செய்து கேள்விப் பத்திர தாஸ்தாவேஜுகளை இக் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதில் பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

த. பெ. 1367,
356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2,
1973.07.21.

8-428—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

---

தேசிய விளங்கினக் காட்சிச்சாலை—தெஹிவளை

பின்வரும் விலங்குணவுகளை விநியோகிப்பதற்கு சீல் பொறிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 1972 ஆகஸ்ட் 30 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிவரையும் தெஹிவளை, இலங்கை மிருகக் காட்சிச்சாலைத் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவர் அவர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

காய்கறிகள், பழவகைகள், உணவுவகைகள்.

கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது கேள்விப்பத்திரக்காரர்கள் சமுகமளித்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவர். கேள்விப் பத்திரங்கள் மேலுள்ள 1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட திகதியில் நேரத்திலும் இலங்கை மிருகக்காட்சிச்சாலை அதிபரது அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும்.

தெஹிவளை, இலங்கை மிருகக்காட்சிச்சாலை அதிபரிடம் இருந்து பெறப்படும் விண்ணப்பத்தில் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். இப்பத்திரங்கள் 1972 ஆக்ஸ்ட் 29 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரட்டிப்புப் படிவத்தில் இருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் உறையின் இடது புறத்தில் (அனுப்பப்படும் விடயங்களைப் பொறுத்து) காய்கறிகள், பழவகைகள் முதலியவற்றில் கேள்விப்பத்திரங்கள் அல்லது இறைச்சியும் இறைச்சிப் பண்டங்களுக்குமான கேள்விப்பத்திரங்கள் என குறிப்பிடப்படுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது தெஹிவளை, இலங்கை மிருகக்காட்சிச்சாலை அதிபரது அலுவலகத்தில் கேள்விப்பத்திரப் பெட்டியில் போடுதல் வேண்டும். கேள்விப்பத்திரக்காரர்கள் விரும்பின் நாம் அல்லது தமது முகவரி மூலமோ ஏற்றுக்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கும். தெஹிவளை இலங்கை மிருகக்காட்சிச்சாலை அலுவலக உதவியாளரிடம் சீல் பொறித்த கேள்விப்பத்திரங்களை (மேலுள்ள 4 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட விவரங்களையும் பெயர் முகவரிகள் யாவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும்) நேரடியாக ஒப்படைக்கலாம்.

கேள்விப்பத்திரங்களுக்கு ரூபா 50/- (ஐம்பதுமட்டும்) கட்டுப்பணமாக இக்கந்தோரில் செலுத்தி கேள்விப்பத்திரம் பெறுவதற்கு முன்னர் அப்பற்றுச் சீட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இக்கேள்வியைப் பற்றிய மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் தெஹிவளை, இலங்கை மிருகக்காட்சிச்சாலை அதிபரிடம் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

டப்ளியூ. எல். ஈ. டி அல்விஸ்,
பணிப்பாளர்,
இலங்கை மிருகக்காட்சிச்சாலை.

தெஹிவளை,
1973 ஜூலை 31 ம் திகதி.

8-527—10.08.73 ந் திகதி வர்த்தமானி இல 72.

இலங்கைப் பெட்ரோலியக் கூட்டுத்தாபனம்

சுத்திகரிப்பு பகுதி

தி. பெ. வா. நிலையத்தைக் கட்டல்

சபுகஸ்கந்தை எண்ணெய்ச் சுத்திகரித்தற்சாலையின் தி. பெ. வா. நிலையத்திற்கான இடத்தை மட்டமாக்குதல், வீதிகள், வடிகால்கள், மதகுகள், கட்டடங்கள் ஆகியவற்றை அமைத்தல், ஆகியவற்றிற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்களை, சுத்திகரித்தற்சாலையின் நிதிப்பிரிவில் காசுவைப்பாக ரூபா 100/- (இதில் ரூபா 75/- மட்டும் மீளளிக்கக் கூடியது) கட்டி சிரேட்ட அலுவலக எந்திரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் 20.08.1973 பி. ப. 2.00 மணியுடன் முடிவடையும்.

சிரேட்ட அலுவலக எந்திரி

8-464—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

---

# பொருட்கள் விற்பனையும், பிறவும்

## ஏல விற்பனை

வருமானவரி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 242) இன் 84(2) (அ) பிரிவின் கீழும் உள்நாட்டிறைச் சட்டம் 110(2) (அ) பிரிவின் கீழும் எனக்கு வினியோகிக்கப்பட்ட வரி செலுத்தத் தவறியமை, பத்திரம் இல. டீ. 24/6003-9 இன் கீழ் தடை செய்யப்பட்ட பின்வரும் வாகனங்கள், யாழ்ப்பாணம் பிஸ்கால் காரியாலயத்தில் (பழைய செயலகம்) 1973 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 22 ஆம் திகதி காலை 10 மணிக்கு பிரசித்த ஏல விற்பனைக்கு விடப்படும்.

வாங்க விரும்புவோர் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் வாகனங்களைப் பார்வையிடலாம்.

விற்பனை முடிந்ததும் உடனடியாக முழுத்தொகையையும் பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

விற்பனை செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனை செய்யப்பட்ட 24 மணித்தியாலங்கட்குள் அகற்றப்படல் வேண்டும்.

விற்பனை நடைபெறும் இடத்தில் பகிரங்கப்படுத்தும் ஆணைகளுக்கு அமையவே இவ் விற்பனை செயல்படுத்தப்படும்.

பீ. இராஜசிங்கம்,
வடமாகாண பிஸ்காலுக்காக

பிஸ்கால் காரியாலயம்,
யாழ்ப்பாணம், 27.7.73.

வாகனங்கள் பற்றிய விபரம்

மோட்டார் கார்—பியட், 1800—4 ஸ்ரீ 609—பாவிக்க உகந்தது.
லொறி—சவல்லட்—33 ஸ்ரீ 5095—பாவிக்க உகந்தது.

4-18—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

---

## பாவிக்க முடியாத பொலிஸ் வள்ளம் ஏல விற்பனை

20.8.73 காலை 9.00

பொலிஸ் வள்ளம் "தப்பாணி" கொழும்பில் புதிய இறங்கு துறைமுகத்தில் பகிரங்க ஏலவிற்பனைமூலம் விற்பனை செய்யப்படும்.

ஏலத்தில் இவ்வள்ளத்தை வாங்குபவர் வாங்கும் பொழுதே பணத்தைச் செலுத்தி உடனடியாகவே வள்ளத்தை எடுத்துச் செல்லுமாறு வேண்டப்படுகின்றனர்.

பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்பட்டுள்ள இவ்வள்ளத்தை ஏல விற்பனைக்கு முதல் மூன்றுநாளும் பார்வையிடுவதற்காக மேற்கூறிய புதிய இறங்கு துறைமுகத்தில் வைக்கப்படும்.

ஏ. சி. லோறன்ஸ்,
பொலிஸ் அத்தியட்சகர்
துறைமுகம்,
கொழும்பு.

8-392—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

---

## நீதிமன்றம், திருகோணமலை

16.8.73 பி. ப. 2 மணிதொடக்கம் பிரதேச நீதிமன்றங்கள் நிர்வாகச் செயலாளர் (மட்டக்களப்பு) முன்னிலையில் மேற்படி நிதிமன்ற வளவில் பின்வரும் கோரப்படாத பொருட்கள் குறித்த திகதிக்கு முன்பாக எவராலும் கோரப்படாவிடின் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலவிற்பனையில் பொருட்கள் வாங்குவோர் உடன் பணம் கொடுத்தும் பொருட்களை உடன் அப்புறப்படுத்தல் வேண்டும்.

கு. விக்னராஜா,
நீதவான், திருகோணமலை.

1973 ம் ஆண்டு யூலை மீ 28 ந டை.

| வழக்கு இலக்கம் | பொருட்கள் விபரம் |
|---|---|
| 23513 | ஒரு இரட்டை மாட்டு வண்டில் |
| 23514 | ஒரு இரட்டை மாட்டு வண்டில் |
| 23515 | ஒரு இரட்டை மாட்டு வண்டில் |
| 23517 | ஒரு இரட்டை மாட்டு வண்டில் |
| 10370 | ஒரு நிலையும் ஜன்னலும் |
| எம். 1960 | மூன்று சாடிகள் |
| 15491 | ஒரு மண்ணெண்ணெய்ப் போத்தல் |
| 21216 | ஒரு கலர் பென்சிற்பெட்டி. |
| 15232 | ஒரு பாவித்த றலி துவிச்சக்கரவண்டி இல. ஈ. எவ. 1178 |
| ஏ. ஆர். 2491/72 | ஒரு பழுதடைந்த கம்பர் பெடல் துவிச்சக்கரவண்டி இல. ஏ. ஜீ. 94140 |
| ஏ. ஆர். 2670/72 | ஒரு பழுதடைந்த றலி துவிச்சக்கரவண்டி இல. 2385 |
| ஏ. ஆர். 2490/72 | ஒரு பழுதடைந்த றஜ் பெடல் துவிச்சக்கரவண்டி இல. 34528 |
| ஏ. ஆர். 2490/72 | ஒரு றஜ் பெடல் துவிச்சக்கரவண்டி இல. 56983 |
| 10579 | ஒரு மொனரா பெடல் துவிச்சக்கரவண்டி இல. 01594 |
| 15907 | ஒரு றலிபெடல் துவிச்சக்கரவண்டி இல. 70எச் 360 |
| ஏ. ஆர். 2337/73 | பாவித்த துவிச்சக்கரவண்டி இல. டீ. எம். 375 |
| 20369 | ஒரு பழுதடைந்த றலிபெடல் துவிச்சக்கரவண்டி இல 89201 |
| 10610 | ஒரு மொனரா துவிச்சக்கரவண்டி இல. பி. எம். 528 |
| ஏ. ஆர். 2491/72 | துவிச்சக்கரவண்டி பிரேம் இல. 37122 |

ஏனைய பொருட்கள்

| | |
|---|---|
| பெரிய தகரப் பீப்பா | 20 |
| வெற்றுச் சாராயப் போத்தல் | 300 |
| கோடரி | 15 |
| பெரிய வாள் | 5 |
| மண்வெட்டி | 5 |
| கத்தி | 15 |
| சிறிய கத்தி | 5 |
| பிளாஸ்ரிக் ரின் | 5 |

கு. விக்னராசா,
நீதவான், திருகோணமலை.

1973 ம் ஆண்டு யூலை மீ 28 ந டை.

8-531—10.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 72

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஓகத்து | 3.8.73 | வெள்ளி | 25.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 1.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 8.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 15.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 22.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 29.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 5.9.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 11.9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 19.9.73 | புதன் | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பட்டது.